# ஔவையும் பெண்மையின் மாட்சியும்

**மா தே அருண் மொழி நங்கை**
தமிழ்த்துறை, ஹோலிகிராஸ் கல்லூரி (தன்னாட்சி), நாகர்கோவில் - 629004
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி - 627012
மின்னஞ்சல்: arunmozhinangai@holycrossngl.edu.in

**கட்டுரைச் சுருக்கம்**

*ஔவையார் பெண்களைப் பற்றி முன்வைக்கும் கருத்துகள் வெறும் அறிவுரைகள் மட்டுமல்ல அவை ஒரு சமூகம் சிதையாமல் இருப்பதற்கான வாழ்வியல் சுதந்திரங்கள். ஔவையார் பெண்களை வெறும் போகப் பொருளாகவோ அல்லது பலவீனமானவர்களாகவோ ஒருபோதும் கருதியதில்லை. மாறாக, ஒரு குடும்பத்தின் மங்கலமாகவும், சமூகத்தின் அறக் காவலர்களாகவும் அவர்களைக் கண்டார். இல்லறப் பெண்கள் எப்படி மாண்புடன் திகழ வேண்டும் என்பதையும், ஒழுக்கம் தவறும் பெண்கள் சமூகத்திற்கு எப்படித் தீங்காக முடிவார்கள் என்பதையும் அவர் மிகத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டியுள்ளார். கணவனுக்கும் மனைவிக்கும் இடையிலான உறவு, குடும்ப ஒழுக்கம் போன்றவற்றை இவர் கடுமையாகச் சாடியும் போற்றியும் பாடியுள்ளார். ஒழுக்கமே பெண்களின் உண்மையான அழகு என ஔவையார் எடுத்துரைக்கின்றார். ஆரம்பகால வளர்ச்சிக்காகத் தியாகம் செய்த தாயை ஒருபோதும் மறக்கக் கூடாது என்பதை ஔவையார் தனது பாடல்களில் ஆணித்தரமாகப் பதிவு செய்துள்ளார்.*

## முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க காலம் முதல் பிற்காலம் வரை “ஔவையார்“ என்றபெயர் ஒரு தனிப்பெரும் ஆளுமையாகத் திகழ்கிறது. ”கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு” என்று முழங்கிய ஔவையார். தமிழகத்தின் பட்டிதொட்டியெங்கும் அறியப்பட்டவர். குழந்தைகளுக்கான “ஆத்திசூடி“ முதல் பெரியவர்களுக்கான “நல்வழி“ வரை அனைத்து வயதினருக்கும் அறம் புகட்டியவர். ஔவையாரின் பாடல்களில் சமூகத்தின் சரிபாதியாக விளங்கும் பெண்களைப் பற்றியும், அவர்களின் பண்புகள், கடமைகள் மற்றும் சமூகச் சிக்கல்கள் குறித்தும் மிக ஆழமான கருத்துகள் இடம்பெற்றுள்ளன. இக்கட்டுரை ஔவையார் காட்டும் இல்லறப் பெண்கள் மற்றும் பொதுமகளிர் குறித்த பார்வையை விரிவாக ஆராய்கிறது.

## ஔவையார்

தமிழ்ப் புலவர் வரிசையில் குறிப்பிடப்படும் ஔவையார் ஒருவரே என்று பொதுவான கருத்து நிலவினாலும், வரலாற்று ரீதியாக மூவர் இருந்ததாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். சங்க கால ஔவையார் கி.பி. முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்ததாகவும் சங்க இலக்கியப் பாடல்களைப் பாடியவர் என்ற கருத்து ஆய்வாளர்களால் முன் வைக்கப்படுகிறது. அதியமான் நெடுமான் அஞ்சி எனும் குறுநில மன்னனின் மிகநெருங்கிய நண்பராகவும், அவைப் புலவராகவும் திகழ்ந்தவர். அதியமானுக்கும் தொண்டைமானுக்கும் இடையே போர் மூளவிருந்த சூழலில், அதியமானின் தூதராகச் சென்று தொண்டைமானின் ஆயுதக் கிடங்கைப் புகழ்வது போலப் பாடி, போரைத் தடுத்தவர். தனக்குக் கிடைத்த “சாவா மருந்தாகிய’’ நெல்லிக் கனியைத்தான் உண்ணாமல், தமிழ் தழைக்க வேண்டும் என்ற நோக்கில் ஔவையாருக்கு அதியமான் வழங்கிய நிகழ்வு இவரது காலத்தில்தான் நிகழ்ந்தது. புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகிய தொகுப்புகளில் இவரது பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

இடைக்கால ஔவையார் கி.பி. 10 - 12 ஆம் நூற்றாண்டின் சோழர் காலத்தைச் சேர்ந்தவர். சமயப் பாடல்களிலும் சமூகப் பணிகளிலும் ஈடுபாடு கொண்டவராக அறியப்படுகிறார். கடையேழு வள்ளல்களில் ஒருவரான பாரியின் மறைவுக்குப் பிறகு, ஆதரவற்ற நிலையில் இருந்த அவரது மகள்களான அங்கவை மற்றும் சங்கவைக்கு மணம் முடித்து வைக்க இவர் பெரும் முயற்சி எடுத்தார். சேர, சோழ, பாண்டியமன்னர்களை ஒருசேரக் கண்டு அறிவுரை கூறும் ஆற்றல் கொண்டவராக இவர் சித்தரிக்கப்படுகிறார். புகழ்பெற்ற “விநாயகர் அகவல்'' எனும் பக்திப் பிரபந்தம் இவரால் பாடப்பட்டதாகக் கருதப்படுகிறது.

பிற்கால ஔவையார் கி.பி. 12 ஆம் நூற்றாண்டுக்கு பின் பள்ளிக் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் அறிந்த நீதி நூல்களை வழங்கியவர். ‘‘தமிழ் மூதாட்டி” என்று நாம் உருவகப்படுத்தும் வடிவம் இவருக்குப் பொருந்தும். ஆகர வரிசையில் அறக்கருத்துகளைச் சொன்ன முதல் நூல் ஆத்திசூடி. ஆழமான வாழ்வியல் உண்மைகளை ஒரே வரியில் விளக்குவது கொன்றைவேந்தன் ஆகும். மூதுரை மற்றும் நல்வழியானது உவமைகள் மூலம் மனிதப் பண்புகளை விளக்கும் பாடல்கள் கொண்டவை.

**இல்லறப் பெண்களின் மாண்பு**

ஒரு சமூகம் செம்மையாக இயங்க அதன் அடிப்படையான குடும்பம் சிறப்பாக இருக்கவேண்டும். குடும்பத்தின் அச்சாக ஔவையார் பெண்களைக் கருதுகிறார். “இல்லாள்'', “மனைவி'', “இல்லத்தரசி'' எனப் பலநிலைகளில் பெண்களை அவர் அடையாளப்படுத்துகிறார். இல்லறத்தின் மகிழ்ச்சியாக ஔவையார் மனைவியின் மாண்பைப்பற்றிப் பேசும்போது, ஒரு நல்ல மனைவி அமைந்த வீட்டில் குறைபாடுகள் இருக்காது என்கிறார். இதனை,

**"இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை”** (மூதுரை பாடல்: 21)

என்னும் வரிகள் உணர்த்துகின்றன. அன்பு, அடக்கம், அமைதி, பொறுமை, பணிவு ஆகிய நற்பண்புகளைக் கொண்ட மனைவி இருக்கும் வீடே உண்மையான இல்லறம். மாறாக, கணவனுடன் எப்போதும் முரண்பட்டு, கடுஞ்சொற்கள் பேசும் மனைவி அமைந்தால், அந்தவீடு ‘‘புலி வாழும் புதர்” போன்றதாகிவிடும் என்று எச்சரிக்கிறார். திருவள்ளுவர்,

**"இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்**

**இல்லவள் மாணாக் கடை”** (வாழ்க்கைத் துணைநலம் :குறள்- 53)

முனைவி நற்பண்பு உடையவளாக இருந்தால் அங்கு இல்லாதது என்று எதுவுமில்லை என்று வள்ளுவர் கூறிய கருத்தையே ஔவையாரும் வழிமொழிகிறார். ஒரு பெண்ணின் மென்மையான குணமே அவளது குடும்பத்தைக் காக்கும் அரணாகும்.

**இல்லறப் பெண்களுக்கு ஔவையார் கூறும் எச்சரிக்கைகள்**

ஒரு குடும்பத்தின் கௌரவம், பாரம்பரியம் மற்றும் நற்பண்புகளுக்கு மாறாக நடக்கும் பெண், அந்த வீட்டிற்குத் தெய்வமாக இருப்பதற்குப் பதில் எமனாக மாறுவாள் என்று ஔவையார் எச்சரிக்கிறார். கணவனின் குடும்ப வழக்கங்களை மதிக்காமலும், பெரியோர்களைப் பேணாமலும் நடக்கும்போது குடும்பத்தின் அஸ்திவாரம் தகர்கிறது.

இத்தகைய பெண்ணால் அந்த வீட்டில் மகிழ்ச்சி மறைந்து, எப்போதும் மரணப யத்திற்கு இணையான மன உளைச்சலே மிஞ்சும் என்பதை ஔவையார் சாடுகிறார்.

**"துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு"** (கொன்றைவேந்தன்: 41)

இந்தப் பாடல் மிகவும் ஆழமான எச்சரிக்கையைத் தருகிறது. “துடித்தல்'' என்பது இங்கே கணவன் துன்பப்படும்போது அவரோடு இணைந்து வருந்துவதைக் குறிக்கும். கணவன் வறுமையிலோ, நோயிலோ வாடும்போது அவனுக்கு ஆறுதலாக இல்லாமல், இரக்கமில்லாமல் இருக்கும் பெண் மடியில் கட்டிய நெருப்பைப் போன்றவள். மடியில் நெருப்பைக் கட்டிக்கொண்டு ஒருவன் எப்படி நிம்மதியாக இருக்க முடியாதோ, அதேபோல் அன்பில்லாத பெண்ணுடன் வாழும் ஆணின் வாழ்வு மெல்ல மெல்ல அழிந்துவிடும். நெருப்பு எப்படித் தன்னைத் தாங்கிய துணியையே எரிக்குமோ, அப்படி இப்பெண் தான் சார்ந்த குடும்பத்தையே அழித்துவிடுவாள். ‘‘ஒத்தாரும் ஒவ்வாதார்” எனும் கருத்தின்படி, கணவன்-மனைவி இடையே மன ஒற்றுமை இல்லாவிட்டால் அந்த இல்லறம் நரகத்திற்குச் சமமானது. கணவனின் குறிப்பறிந்து செயல்படாத பெண், குடும்ப அமைதியைக் குலைக்கிறாள். கணவன் ஒன்று நினைக்க, மனைவி அதற்கு நேர்மாறாகச் செயல்படுவது தொடர்ந்தால், அங்கு செல்வம் தங்குவதில்லை. மாறாகப் பூசல்களே மிஞ்சும்.

**பெண்களின் உண்மையான அழகு**

உலகியல் ரீதியாக பெண்கள் ஆபரணங்களை விரும்புவது வழக்கம். ஆனால், ஔவையார் ஒரு பெண்ணிற்குச் சிறந்த அழகு எவை என்பதை அழகாக எடுத்துரைக்கிறார். கொன்றை வேந்தனில் இடம்பெற்ற பேதைமை என்பது அறியாமை அல்ல. வஞ்சனையற்ற தூய மனதைக் குறிக்கிறது. ஔவையாரின் கொன்றை வேந்தனில் வரும் ‘‘கற்பெனப்படுவது சொல் திறம்பாமை” என்ற வரிகளில் இவ்வாறு கூறுகிறார். திருவள்ளுவர் கூறியது போல, ஒரு பெண்ணைச் சிறை வைத்துப் பாதுகாப்பதை விட, அவளே தன்னைத் தனது ஒழுக்கத்தால் பாதுகாத்துக் கொள்வதே மேலானது.

**பொருட்பெண்டிர் குறித்த அறிவுரை**

சமூகத்தில் ஒழுக்கச் சிதைவைத் தடுக்கும் நோக்கில், ஔவையார் ஆண்களுக்குப் பல எச்சரிக்கைகளை விடுத்துள்ளார். “மைவிழியார்'' அல்லது “தையல்'' என்று அவர் குறிப்பிடுவது பெரும்பாலும் பொருளுக்காக அன்பு காட்டும் பெண்களையே.

“தையல் சொல் கேளேல்'' என்பதில் வரும் தையல் என்பது செயற்கையாகத் தங்களை அழகுபடுத்திக் கொண்டு ஆண்களைக் கவரும் பெண்களைக் குறிக்கும். இவர்களின் பேச்சைக் கேட்டு ஒருவன் மயங்கினால் அவனது வாழ்வு சீரழியும். செயற்கை அழகின் போலித்தன்மை பற்றி பேசும் போது இவ்வாறு கூறுகிறார்.

விலை மகளிரின் பின்னால் செல்லும் ஒருவன், கல்லைத் துணையாகக் கொண்டு ஆற்றைக் கடக்க முயல்பவனைப் போன்றவன் என்கிறது நல்வழி. கல் எப்படி ஆற்றில் மூழ்குமோ, அதுபோல இத்தகைய பெண்களின் தொடர்பும் ஒருவனைச் சமூகத்தில் மூழ்கடித்துவிடும்.

**‘‘போதந்தனம் கல்வி பொன்றவரும் காலம் அயல்**

**மாதார்மேல் வைப்பான் மனம்”** (நல்வழி :பாடல்- 36)

விலை மகளிர் மீது ஆசை கொள்ளும் ஒருவனுக்கு அவனது அறிவும் செல்வமும் கல்வியும் அழியும் காலம் நெருங்கிவிட்டது என்று ஔவையார் எச்சரிக்கிறார்.

**தாய்மையின் சிறப்பு**

ஔவையார் காட்டிய “தாய்மை” என்பது வெறும் உறவுமுறை சார்ந்தது மட்டுமல்ல. அது ஒரு வாழ்வியல் தர்மமாகவும், இறைநிலைக்கு இணையாகவும் போற்றப்படுகிறது. கண்ணுக்குத் தெரியாத இறைவனைத் தேடி அலைவதைவிட, கண்ணெதிரே வாழும் பெற்றோரே முதல் தெய்வம் என்கிறார் ஔவையார்.

**"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"** (கொன்றைவேந்தன்:1)

என்பதில் அன்னையை முதலாவதாக வைத்துள்ளார். தந்தை உலகைக் காட்டுபவர் என்றால், தாயே அந்தத் தந்தையையும் உலகையும் குழந்தைக்கு அறிமுகம் செய்பவர். ஒருவர் எத்தனை தான தருமங்கள் செய்தாலும், அறச் செயல்களில் ஈடுபட்டாலும், வீட்டில் இருக்கும் தாயைப் போற்றாவிடில் அந்த அறங்கள் பயன் தராது என்பது ஔவையின் கருத்தாகும். கோயிலுக்குச் சென்று செய்யும் வழிபாட்டைவிட, தாயின் சொற்களைக் கேட்டு நடப்பதே ஒருவனுக்குச் சிறந்த ஒழுக்கத்தைத் தரும்.

தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை என்பதில் கோயில் என்பது அமைதி, தூய்மை மற்றும் அருள் கிடைக்கும் இடமாக கருதப்படுகின்றன. ஔவையார் ஒரு தாயையே நடமாடும் கோயிலாக உருவகப்படுத்துகிறார். கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று சொன்ன அதே ஔவை, தாய் இல்லாத வாழ்வு பாதுகாப்பு அற்றது என்பதையும் உணர்த்துகிறார். ஔவையார் தந்தை வழிச் சமூகத்தில் வாழ்ந்தாலும், தாய்மையின் மேன்மையை எப்போதும் உயர்வாகச் சொல்கிறார். மற்ற உறவுகள் ஒருவன் செய்யும் பிழைகளைக் கண்டு தண்டிக்கும். ஆனால், “பெண் நீர்மைக் கற்பு அழியா ஆற்றல்” என்று சொன்ன ஔவை, தாயின் பொறுமையையும் மன்னிக்கும் குணத்தையும் தெய்வீகப் பண்பாகக் கருதுகிறார்.

தாய் என்பவள் ஒரு சமுதாயத்தை உருவாக்குபவள். “ஔவியம் பேசேல்”, “ஐயமிட்டுஉண்” போன்ற நற்பண்புகளை ஒருகுழந்தைக்கு ஊட்டுகிற முதல் ஆசிரியர் தாயே. எனவே, ஒரு சிறந்த தாய்ப் பெற்ற பிள்ளைகள் சமுதாயத்தில் சிறந்த குடிமக்களாக விளங்குவார்கள். உலகம் போற்றும் வீரர்களாக இருந்தாலும், மன்னர்களாக இருந்தாலும் அவர்கள் ஒருதாயின் மடியில் வளர்ந்தவர்களே என்பதை ஔவையார் நினைவுபடுத்துகிறார். “அன்னையும் பிதாவும்” என்று தொடங்கி, தாயின் பெருமையை விண்ணளவு உயர்த்திப் பிடிப்பதன் மூலம், பெண்மையின் உன்னத நிலையை ஔவையார் நிலைநாட்டியுள்ளார்.

**முடிவுரை**

ஒரு வீட்டின் பொருளாதாரத்தையும், நிம்மதியையும் தீர்மானிக்கும் சக்தியாகப் பெண்ணைப் பார்க்கிறார். அவள் அன்புடன் இருக்கும்போது அந்த வீடு கோவிலாகிறது. “மங்கையர்க்கு அழகு தன் கணவன் சொல் பேணுதல்” என்பதன் மூலம், குடும்பக் கட்டமைப்பைக் காக்கும் பொறுப்பு பெண்ணிடம் இருப்பதை வலியுறுத்துகிறார். ஔவையாரின் எச்சரிக்கைகள் பெண்களைக் கட்டுப்படுத்துவதற்காகச் சொல்லப்பட்டவை அல்ல. மாறாக, ஒரு

வீட்டின் அச்சாணி முறிந்தால் அந்த வீடே சரிந்துவிடும் என்ற உண்மையை உணர்த்தவே அவர் “மடியில் நெருப்பு” போன்ற கடுமையான உவமைகளைக் கையாண்டார். ஔவையாரின் நீதி நூல்கள் இன்றும் பெண்களுக்கான வாழ்வியல் வழிகாட்டியாகவும், ஒழுக்கத்தின் உரைகல்லாகவும் திகழ்கின்றன என்பதில் ஐயமில்லை. அறம் பேணும் பெண்ணே, அகிலத்தின் அச்சாணி என்பதை ஔவை நமக்கு உணர்த்துகின்றார்.

**துணை நூற்பட்டியல்**


1. பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் (உரை). நற்றிணை நானூறு மூலமும் உரையும். மறு அச்சு. சென்னை: திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 2007
2. ……பாட்டும் தொகையும். சென்னை: முர்ரே ஆண்டு கம்பெனி 1957
3. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை(உரை). புறநானூறு. சென்னை: தமிழ்மண் அறக்கட்டளை 2008.
4. மு. சண்முகம்பிள்ளை(உரை). குறுந்தொகை மூலமும் உரையும். தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம் 1985.
5. முத்துச் சண்முகன், வேங்கடராமன் சு. இலக்கிய ஆராய்ச்சி நெறிமுறைகள். மதுரை: முத்துப் பதிப்பகம்1980.